வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 33/2023

வழக்கு சாட்சி LW4 /PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | முருகேசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 45 |

தேதி 25.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மணலி பகுதியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 30.09.2022 அன்று மதியம் பால்பண்ணை காவல் நிலைய உதவி ஆய்வாளர் முதல் நாள் எனது வீட்டிற்கு பின்புறம் நடந்த விபத்து தொடர்பாக விசாரணை செய்தபோது என்னிடம் மேற்படி கையொப்பத்தினை பெற்றார். நான் செய்து கொடுத்தேன். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் எம்எம்டிஏ 3வது தெருவில் குடியிருக்கிறேன். எனது வீட்டிற்கு அருகில் டீ கடை உள்ளதா என்றால் உள்ளது. மாதிரி வரைபடம் என் முன்பாக வரைந்தார்களா என்றால் ஆமாம். அதில் டீ கடை வரைந்து

காட்டப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் எனது வீட்டிற்கு பின்புறம். சம்பவத்தில் இறந்தவரை தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**